பாவெல்

★

(மாக்ஸிம் கார்க்கி)

★

தமிழாக்கம் :

பி. எக்ஸ். ரங்கசாமி, பி. ஏ.,

வளர்மதி வெளியீடு — 2.

போலெஸ்

(மாக்ஸிம் கார்க்கி)

★

தமிழாக்கம் :

பி. எக்ஸ். ரங்கசாமி

மதுரை காமராசர்

★

கிடைக்குமிடம் :

காலேஜ் புக் ஸ்டால்

67, ஐரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்

முதற் பதிப்பு:

அக்டோபர் — 1951.

பதிப்புரிமை பெற்றது.

'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27–1–1979

காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூல்...

ஸ்டார் பிரஸ், பாளையங்கோட்டை 9—51. ந. சாப்பி 1000.

போலெஸ்

அவ்வை
சண்முகம் நூலகம்.

என் நண்பரொருவர் கீழ் வரும் கதையை என்னிடம் சொன்னார்:—

மாஸ்கோ நகரில் மாணவனாயிருக்கும்போது போலந்து தேசத்துப் பெண் ஒருத்தியின் அறையின் பக்கத்தில் நான் வசிக்க நேரிட்டது. அவளுடைய பெயர் தெரீஸா. நெட்டையான கட்டுமஸ்தான தேகம், அடர்ந்த புருவங்கள், கரடு முரடான அகன்ற முகம், மிருகத்தின் பார்வை, மிகவும் கனத்த குரல், ஒரு வண்டிக்காரனின் நடையுடை பாவனைகள்—இவை யாவும் அவளை நான் வெறுக்கும்படி செய்தன. நான் வீட்டின் மாடியில் வசித்து வந்தேன். அவளுடைய அறை என்னுடைய அறைக்கு எதிராக இருந்தது. அவளுடைய அறையில் அவள் இருப்பதாக அறிந்தால் என்னுடைய அறையின் கதவை நான் திறப்பதே கிடையாது. ஆனால், இது அபூர்வமாகத்தான் ஏற்படும். சில சமயங்களில் அவளை நான் மாடிப் படியிலாவது, முற்றத்திலாவது சந்திக்க நேரிடும். அப்பொழுது அவள் என்னைப் புன்முறுவலுடன் பார்ப்பாள். அது எனக்கு அவள் ஏளனஞ் செய்வது போல் தோன்றும். அந்தச் சமயங்களிலெல்லாம் அவள் என்னை வெட்கமின்றி கூர்ந்து பார்த்துக் கொண்டே "மிஸ்டர்! தாங்கள் சௌக்கியந்தானா?" என்று கேட்பாள். அவளுடைய முட்டாள் தனமான சிரிப்பு அவள்மேல் என்னுடைய வெறுப்பை இன்னும் அதிகப் படுத்தும்.

அவள் பக்கத்தில் குடியிருப்பதினின்றும் நான் தப்பித்துக்கொள்ள என்னுடைய ஜாகையை மாற்ற மிகவும்

விரும்பினேன். ஆனால், என் அறை வசிப்பதற்கு மிகவும் சௌகரியமாயிருந்தது. என்னுடைய ஜன்னலிலிருந்து வெளியே பார்த்தால் மிகவும் உற்சாகம் கொடுக்கும் காட்சி தான் என் கண்களுக்குத் தென்படும். தெருப் பக்கமோ சந்தடியில்லாதிருக்கும். ஆகவே, அவ்வறையிலேயே குடியிருக்கத் தீர்மானித்தேன்.

ஒருநாள் காலையில் நான் நன்றாக உடுத்தியபின் கட்டிலில் சோம்பலினால் புரண்டுகொண்டிருந்தேன். வகுப்பிற்குப் போகாமலிருப்பதற்கு ஏதாவது காரணமொன்றைக் கற்பனை செய்ய முயற்சி செய்துகொண்டிருந்தேன். அச்சமயம் என் அறையின் கதவு திடீரெனத் திறந்தது. அந்தப் போலந்து தேசத்துப் பெண்ணின் வெறுப்பையுண்டாக்கும் கனத்த குரல் வாசற் படியில் கேட்டது.

"மிஸ்டர்! காலை வந்தனம்!"

"உன் விருப்பம் யாது?" என்று நான் அவளைக் கேட்டேன். அவள் பெருங் குழப்பம் அடைந்தாள். ஏதோ மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவள் காணப்பட்டாள்.

"மிஸ்டர்! எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்யத் தங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ள வந்தேன். தயவு செய்து மறுக்காதீர்கள்.''

அவள் என்னிடம் இன்னுங் கொஞ்சம் சிநேகம் செய்துகொள்வதற்காகச் சொல்லும் நொண்டிச் சாக்கு என்று நான் நினைத்தேன்.

"நான் என்னுடைய சொந்த ஊருக்கு ஒரு கடிதம் அனுப்பவேண்டியதிருக்கிறது" என்று தாழ்ந்த, தடுமாறின குரலில் அவள் சொன்னாள்.

அவளை நான் மனத்திற்குள் சபித்துக் கொண்டேன். "உனக்கு விருப்பமானால் அக்கடிதத்தை நான் எழுது கிறேன்," என்று சொல்லிவிட்டு ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டு மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்தேன். "சரி, பக்கத்தில் வா. உட்கார்ந்து எழுத வேண்டியதைச்சொல்" என்று சொன்னேன். அவள் மிகவும் ஜாக்கிரதையாகப் பக்கத்தில் வந்து நாற்காலியின் ஓரத்தில் உட்கார்ந்தாள். அவள் ஒரு குற்றவாளி பார்ப்பதுபோல் என்னைப் பார்த் தாள்.

"நான் யாருக்கு எழுதவேண்டும்?"

"போலெஸ்லாவ் கப்ஷாத்திற்கு, வார்ஸா ரயில் பாதையிலுள்ள ஸ்வென்ஸியானி பட்டணத்தில்—"

"சரி, நான் என்ன எழுதவேண்டும்? சொல்"

"என் அன்பிற்குரிய போலஸ்! என் இருதயத்தின் இன்பமே! என் நேசரே! ஆண்டவரின் தாய் உம்மைக் காப் பாற்றுவாராக! துக்கத்தில் மூழ்கியிருக்கும் உம்முடைய மாடப் புறுவாகிய தெரீஸாவிற்கு இவ்வளவு நீண்டகாலமாக ஏன் கடிதம் எழுதவில்லை?"

எனக்குச் சிரிப்பு அடக்கமுடியவில்லை. துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் மாடப் புறு! அவள் ஏறக்குறைய ஆறடி உயரமிருப்பாள். குஸ்தி பயில்வானுக்குள்ள கைகள்! கருமை நிறமான முகம். மாடப்புறு வீடுகளின் புகைக் கூண்டுகளில் இவ்வளவு காலம் வாசஞ் செய்துகொண்டிருந்தது போலும்! என்னைத்தானே ஒருவாறு சமாளித்துக் கொண்டு "இந்தப் போலெஸ்ட் யார்?" என்று கேட்டேன்.

நான் அந்தப் பெயரைத் தப்பிதமாக உச்சரித்ததால் வருத்தமடைந்தவள் போல் காணப்பட்டாள்.

"போலஸ்! அவர் என் காதலர்!"

"காதலன்!"

"மிஸ்டர், தாங்கள் ஏன் அவ்வளவு ஆச்சரியப்படுகிறீர்கள்? நான் ஒரு பெண். ஒரு காதலனைப் பெற்றிருக்கலாகாதா?"

அவள்! ஒரு பெண்! ஆம், இம்மாதிரி விஷயங்களைப் பற்றி யார் என்ன சொல்லக்கூடும்? உலகத்தில் எதுவும் நடக்கும்!

"நீங்கள் எவ்வளவு காலமாக காதலர்களாக இருக்கிறீர்கள்?"

"ஆறு வருஷங்கள்."

"சரி! மேலும் உன் கடிதத்தில் எழுத வேண்டியதைச் சொல்."

அவள் எழுதச் சொன்ன விஷயங்கள் என் மனத்தை உருக்கின. நான் போலஸ ஸ்தானத்தில் இருக்க என் முழு மனதோடு சம்மதித்திருப்பேன். ஆனால் கடிதம் எழுதுபவள் தெரீஸா ஆயிற்றே!

"மிஸ்டர்! தாங்கள் செய்த உபகாரத்திற்காக என் ஆத்ம பூர்வமாக தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நான் தங்களுக்கு எவ்விதத்திலாவது உதவி செய்ய முடியுமா?"

"இல்லே. மிகவும் நன்றி."

"தங்களுடைய சட்டைகளையும், கால் சட்டைகளையும் பழுதுபார்க்க வேண்டியதிருந்தால்...."

எனக்கு மிகவும் கோபம் வந்து விட்டது. அவளுடைய சேவை எனக்குத் தேவையில்லை என்று கண்டிப்பாக அவளிடம் சொன்னேன். உடனே அவள் அங்கிருந்து சென்று விட்டாள்.

இரண்டு வாரங்கள் சென்றன. ஒரு நாள் மாலை மெதுவாக சீட்டியடித்துக் கொண்டு ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். எனக்கு என்னவோ மனநிம்மதியில்லாதிருந்தது. வெளியே செல்வதற்கும் வசதியில்லாதிருந்தது. திடீரென்று கதவு திறந்தது. யாரோ என்னைப் பார்க்க வந்தார்கள்.

"மிஸ்டர்! தாங்கள் இப்பொழுது வேலையாய் இருக்கிறீர்களோ?" தெரீஸா—உம். அவளைத்தவிர வேறு யார் வந்திருந்தாலும் நான் மகிழ்ச்சி யடைந்திருப்பேன்.

"இல்லை. உனக்கு என்னவேண்டும்?" என்று நான் உரத்த குரலில் கேட்டேன்.

"மிஸ்டர்! தாங்கள் எனக்காக இன்னொரு கடிதம் எழுத விரும்புகிறேன்,"

"நல்லது. மறுபடியும் போலெஸுக்குத் தானே எழுத வேண்டும்?"

"இல்லை. இந்தத் தடவை போலெஸிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் எழுதவேண்டும்?"

"என்—ன?"

"மிஸ்டர்! என்னை மன்னிக்கவும். நான் பெரியமுட்டாள். இந்தக் கடிதம் எனக்கல்ல. என்னுடைய சிநேகிதர் ஒருவருக்காக. அவருக்கு ஒரு காதலி இருக்கிறாள். அவளுடைய

பெயர் என்னுடைய பெயரைப் போல்தான்—தெரீஸா. என் நண்பருக்கு எழுதத் தெரியாது. ஆகையால் அந்தத் தெரீஸாவிற்கு அவர் எழுதுவது போல் ஒரு கடிதம் எழுத வேண்டும்.”

நான் அவளைப் பார்த்தேன். மிகவும் குழப்பமடைந்தவள் போல் காணப்பட்டாள். அவளுடைய கை விரல்கள் நடுங்கின. முதலில் நான் அவளைப்பற்றிச் சரியாக அறிந்துகொள்ளத் தவறிய போதிலும் முடிவில் யாவும் அறிந்துகொண்டேன்.

“தெரீஸா! நீ என்னிடம் மூட்டைக்கணக்கில் பொய் சொல்லிக்கொண்டிருந்திருக்கிறாய். உனக்குத் தெரிந்தவர்களில் போலெஸ்களும் கிடையாது. தெரீஸாக்களும் கிடையாது. என் அறைக்குள் நுழைவதற்கான சாக்குப் போக்குகளே இவைகள். உன்னிடம் தெளிவாகச் சொல்லி விடுகிறேன். என்னைச் சுற்றிச் சுற்றி வருவதில் பயனில்லை. உன்னுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. உனக்கு நான் சொல்லுகிறது விளங்குகிறதா?” என்று நான் அவளிடம் கூறினேன்.

அவளுடைய முகம் சிவந்து விட்டது. மிகவும் குழப்பமும் பயமும் அடைந்தாள். ஏதோ சொல்லுவதற்கு உதடுகளை அசைத்தாள். ஆனால் அதைச் சொல்லுவதற்கு அவளால் முடியவில்லை. அவளைக் கொஞ்சம் தப்பிதமாக எண்ணிவிட்டதாக நான் நினைக்க ஆரம்பித்தேன். இவைகளுக்கெல்லாம் காரணம் ஏதோ இருந்தது. ஆனால் அது என்ன?

"மிஸ்டர்" என்று அவள் ஆரம்பித்தாள். அதற்கு மேல் அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை. கதவின் பக்கம் திருப்பிச் சென்று அறைக்கு வெளியே நடந்து சென்றாள்.

என் மனதில் ஒருவித மகிழ்ச்சியற்ற உணர்ச்சியுடன் நான் இருந்தேன். "படார்" என்று அவளுடைய அறையின் கதவை அடைக்கும் சத்தத்தைக் கேட்டேன். உண்மையில் அவள் மிகவும் கோபமாய் இருந்தாள். நடந்ததை மறுபடியும் நினைத்துப் பார்த்தேன். அவளிடம் போய் திரும்பவும் என் அறைக்கு வரும்படி வற்புறுத்தத் தீர்மானித்தேன். அவள் எழுத விரும்பின கடிதத்தை நான் எழுதிக் கொடுக்க வேண்டும். நான் அவள் அறைக்குள் நுழைந்தேன். அவளுடைய தலையை கைகளில் அழுத்தியவண்ணம் மேஜையின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

"தெரீஸா! நான் சொல்வதை ஒரு நிமிஷம் கேட்பாயா?" என்று நான் கேட்டேன். பதில் இல்லை. மறுபடியும் அதே கேள்வியை நான் கேட்டேன்.

"தெரீஸா! நான் சொல்வதைக் கேள்."

அவள் திடீரென்று குதித்தெழுந்தாள். ஒளிவீசும் கண்களுடன் என் பக்கம் வந்தாள். என்னுடைய தோள்களில் அவளுடைய கரங்களை வைத்துக் கொண்டு தாழ்ந்த குரலில் பேச ஆரம்பித்தாள்:

"மிஸடர், போலெஸ் என்று ஒருவர் இல்லாவிட்டால் என்ன? தெரீஸா இல்லாவிட்டாலும் என்ன? அதனால் உங்களுக்கு என்ன? காகிதத்தில் சில வரிகளை எழுதுவதற்குத் தங்களுக்கு அவ்வளவு கஷ்டமா? தாங்கள் நல்ல மனிதர் என்று எண்ணினேன். ஆம். போலெஸ் என்பவர் இல்லை.

தெரீஸாவும் இல்லை. இது உண்மை. ஆனால், நான் மாத்திரம் இருக்கிறேன். அதைப் பற்றி என்ன?"

"தெரீஸா! நீ என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாய்? போலெஸ் என்று ஒருவர் இல்லையா?"

"ஆம், அப்படி ஒருவருமில்லை. அதைப் பற்றி என்ன?"

"தெரீஸாவும் இல்லையா?"

"இல்லை. தெரீஸாவும் இல்லை. அது, ஆம், நான்தான்".

அவள் சொன்னதில் எனக்கு ஒரு வார்த்தையும் விளங்கவில்லை. எங்கள் இரண்டு பேர்களிலும் யாருக்கு மூளைக் கோளாறு என்றறியும் பொருட்டு அவளுடைய கண்களை நான் கூர்ந்து பார்த்தேன். அவள் மறுபடியும் மேஜையின் பக்கம் சென்றாள். மேஜையின் உள்ளறையில் ஏதோ ஒன்றைக் கொஞ்சநேரம் தேடிப் பார்த்துவிட்டு என்னிடம் வந்தாள்.

"இதோ, எனக்காக நீங்கள் எழுதின கடிதம். பெற்றுக் கொள்ளுங்கள். இரண்டாம் முறையாக எனக்கு ஒரு கடிதம் எழுதித் தர தங்களுக்கு விருப்பமில்லையல்லவா? மற்ற யாரும் தங்களைவிட அன்பாய் இருந்திருப்பார்கள். எனக்கு இந்த உதவியும் செய்திருப்பார்கள்" என்று வருத்தமான குரலில் அவள் சொன்னாள்.

அவள் கையில் வைத்திருந்த கடிதம் அவளுக்காகப் போலெஸுக்கு எழுதின கடிதம் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

"தெரீஸா! இதோ பார். இதெல்லாம் என்னவென்று எனக்கு விளங்கக் கூறுவாயா? தபாலில் அனுப்புவதற்கு

அவசியம் ஏற்படாத கடிதங்களை எழுதும்படி மற்றவர்களை நீ ஏன் கேட்கிருய்? "

"தபாலில் அனுப்பவா? எங்கே?"

"ஏன், இந்த போலெஸுக்குத்தான்!"

"ஆனுல் போலெஸ் என்பவர் இருந்தால்தானே!"

அவள் சொன்னது எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. அந்த அறையை விட்டு வெளியே செல்வதைத் தவிர வேறு வேலை எனக்கு அங்கு இல்லை. ஆனுல் அவள் தான் சொன்னதை விளக்கிக் கூறினுள்.

"அதைப்பற்றி என்ன? போலெஸ் என்று ஒருவர் இல்லை: ஆனுல் உண்மையிலேயே அவர் இருக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். நானும் மற்றவர்களைப் போல் மானிடப் பிறவி இல்லையா? எனக்கு அது தெரியும். நிச்சயமாகத் தெரியும். நான் அவருக்குக் கடிதம் எழுதுவதால் யாருக்கும் எவ்வித தீமையும் ஏற்படாது"

"யாருக்கு?" என்று நான் கேட்டேன்.

"போலெஸுக்குத்தான்!" என்ற பதில் கிடைத்தது.

"ஆனுல் போலெஸ்தான் இல்லையே!"

"ஐயோ! ஆண்டவரின் தாயாரே! போலெஸ் இல்லாவிட்டால் என்ன? அவர் இல்லவே இல்லை. ஆயினும் எனக்கு அவர் இருக்கிருர். நான் தெரீஸா. அவர் என் கடிதங்களுக்குப் பதில் எழுதுகிருர். நான் அவருக்கு எழுதுகிறேன்."

எனக்கு யாவும் விளங்கிவிட்டது. என் மனத்தில் பெரும் வேதனை. எனக்கு மிகவும் சமீபத்தில் வசித்து வந்த

அப்பெண்ணை அன்புடன் நேசிக்க, அவள்மேல் பச்சாத்தாப பட உலகத்தில் ஒருவருமில்லை என்று அறிய நான் வெட்கம் அடைந்தேன். அதனுல்தான் அவள் தனக்கென ஒரு நண்பனை சிருஷ்டித்துக் கொள்ள வேண்டியதிருந்தது.

"இதோ, நீங்கள் நான் எழுதுவது போல் போலெஸுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறீர்கள். அதை ஒருவரிடம் வாசிக்கக் கொடுத்தேன். அதை அவர் வாசிக்கும்போது உண்மையில் போலெஸ் இருப்பதாகவே எனக்குத் தோன்றியது. போலெஸிடமிருந்து தெரீஸாவிற்கு ஒரு கடிதம் எழுதும்படி தங்களைக் கேட்கிறேன், அக்கடிதம் எனக்குத்தான். அந்தக் கடிதம் எழுதப்பட்டவுடன் வாசிக் கப்பட்டால் நிச்சயமாகவே போலெஸ் இருப்பதாக நான் திருப்தியடைகிறேன். என் வாழ்க்கை அதனுல் கொஞ்சம் சுகமடைகிறது" என்று சொல்லி முடித்தாள் தெரீஸா.

இவ்விதமாக வாரத்திற்கு இருமுறை போலெஸுக்கும் தெரீஸாவிற்கும் கடிதங்கள் எழுதினேன். அவளுக்கு அருமையான பதில்கள் வரைந்தேன், நான் அவைகளை வாசித்துக் காண்பிக்கும் போது அவளுடைய கனத்த குரலில் அழுவாள், நான் செய்த உபகாரத்திற்குப் பதி லாக என்னுடைய பழைய ஆடைகளைப் பழுது பார்ப்பாள். மூன்று மாதங்கள் கழித்து ஏதோ காரணத்திற்காக அவள் சிறையில் அடைக்கப்பட்டாள். இப்பொழுது அவள் நிச்சயமாக இறந்துபோயிருக்கவேண்டும்.

இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டுவந்த என் நண்பர் சிகரெட்டின் சாம்பலை ஊதிவிட்டு ஆழ்ந்த யோசனை யுடன் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னுர்:

"ஆ...ம், மானிடப் பிறவியொன்று வாழ்க்கையின் கசப்பை எவ்வளவு அதிகம் உட்கொள்ளுகிறதோ அவ்வளவு அதிகம் இன்பத்தை அடையவிரும்புகிறது. ஆனால் நாம் அதை அறியத் தவறிவிடுகிறோம். ஏனெனில் நாம் மங்கிப் போன புண்ணியங்களால் மூடப்பட்டு, தன்னலம் என்னும் திரையால் மற்றவர்களை அறிந்துகொள்ளமுடியாதபடி தடுக்கப்படுகிறோம். மேலும் நம்முடைய நேர்மையைப்பற்றி நாம் மிகவும் திருப்தியடைந்து விடுகிறோம்.

"சமூகத்தில் "வீழ்ந்த மக்கள்" என்று நாம் சொல்லுகிறோம். ஆனால் அம்மக்கள் யார்? நம்மைப் போல் அவர்களும் மானிடப் பிறவிகள்தான். நம்மைப்போலவே எலும்பும், இரத்தமும், நரம்பும், தசையும் உடையவர்களே! இதே மாதிரி விஷயங்கள்தான் இரவு பகலாக காலக்கணக்கில் நமக்குச் சொல்லப்படுகின்றன. நாமும் கேட்கிறோம். ஆனால் அது எவ்வளவு அறிவீனம் என்பதை நாம் அறிகிறதில்லை. உண்மையில் நாமும் வீழ்ந்துபோனவர்களே. மிகவும் ஆழத்தில் விழுந்திருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய குற்றமற்ற தன்மையைப்பற்றியும் உயர்வைப் பற்றியும் திருப்தியடைந்து, சுயநலம் என்னும் படுகுழியில் விழுந்துகிடக்கிறோம். நாம் எவ்விதத்தில் அவர்களைக் காட்டிலும் திறமையுடையவர்கள்! அவர்கள் நம்மைக்காட்டிலும் தந்திரத்திலும் சாமர்த்தியத்திலும் கொஞ்சம் குறைந்தவர்கள், அவ்வளவுதான். மேலும் நம்மிடம் காணப்படாத ஒரு நற்குணத்தை நாம் இருப்பது போல பாசாங்கு செய்து காண்பிக்கிறோம். இவர்களால் அது முடியாது. ஆனால் இதைப்பற்றி இவ்வளவு போதும். இதெல்லாம் கேட்டுக் கேட்டு வெறுப்புக் கொடுக்கக்கூடிய பழங்கதை. இதைப்பற்றிப் பேசுவதற்கே ஒருவன் வெட்கப்படவேண்டும்".

தி.க. சண்முகம்

இது ஓர் வளர்மதி வெளியீடு

★

வேலைக்காரியின்
வேல்விழியால்
வீழ்கிறான்
தந்தை!

★

மகளின்
மான்விழியில்
மயங்குகிறான்
மகன்!!

★

தாயும் மகளும்
தத்தளிக்கிறார்கள்
வாழ்க்கையில்!!!

தந்தை குற்றவாளி! தனயன் நீதிபதி!

★ மிராசுதார் ★

(சமூக நாடகம்)

(ஆசிரியர்: பி. எக்ஸ். ரங்கசாமி, பி. ஏ.,)

விலை ரூபாய் 1

காலேஜ் புக் ஸ்டால்

ஹை ரோடு :: திருநெல்வேலி ஜங்.